# கொய்யாக் கனிகள்

# கொய்யாக் கனிகள்

இரண்டே காட்சிகள், இரண்டே நாட்களின் நிகழ்ச்சி, ஆச்சரியம், சோகம் உள்ளிட்ட இனிய நாடகம். இது சகோதரர்மீது அன்பு, பெண்கல்வி ஆகியவற்றை இனிது விளக்கும். (ப-ர்)

## காட்சி - 1

(கதை நடைபெறுமிடம் புதுச்சேரி)

**கமலம்:**

பெண்கள் யாவரும் பேதை களாம். அவர்
பேச்சை ஆடவர் கேட்பது பிசகாம்
அதனால் தான்அவ் வையார் கூட
இதமாய்த் தையல் சொற் கேளேல் என்று
சொல்லியுள் ளாராம். சுதந்தரம் என்பதே
மெல்லியர்க் கில்லையாம். என்ன வியப்பு!

**கோகிலம்:**

எடி தங்காய் இந்நாட்டுப் பெண்கள்
ஆடவர் கையில் அடிமை ஆயினர்.
சுதந்தர உணர்ச்சி தோன்ற வேண்டும்
இதந்தரு கல்வி இலங்க வேண்டும்.
இவைகள் இல்லையேல் இந்நாட்டுப் பெண்கட்கு
எந்த நாளும் இன்பமில்லை.

**டிரைவர்:**

அம்மா இல்லையா? ... ...

**கமலம்:**

... ... ஆர்? இதோ வருகிறேன்.
ஐயா எங்கே ஆண்டி யப்பா!

**டிரைவர்:**

சேட்டுக் கடைக்குச் சென்றார். என்னை
வீட்டுக்குப்போ விரைவாய் என்றார்
மோட்டார் காரை ஓட்டிக் கொண்டு
வீட்டுக் குவந்தேன் விசேஷம் ஒன்று.

**கமலம்:**

என்ன விசேஷம்? இங்குவா உள்ளே.
என்ன விசேஷம் ஏன் ஆண்டியப்பா?

**ஆண்டியப்பன்:**

இந்த இடத்தில் எவரும் இல்லையே?

**கமலம்:**

என்றன் தமக்கை! இருந்தால் என்ன?
அதனால் பாதகம் இல்லை. அக்கா!

(கோகிலமும் வந்து அமர்ந்தாள்)

**ஆண்டியப்பன்:**

ஐயா ஒரு ரகசியம் அறிவித்தார்.

**கமலம்:**

உன்னிடத்திலா? என்ன ரகசியம்.

**ஆண்டி:**

உங்கள் கொழுந்தன் கோபால் உயிரை
மாய்க்கும் படி எனை மன்றாடினார். அவன்
மாண்டு போனால் லக்ஷம் வருமாம்.

**கமலம்:**

அந்தோ! அக்கா அவர் எண் ணத்தை
அறிந்து கொண்டீரா? ஆறு வயதுக்
குழந்தையைத் தமது கூடப் பிறந்த
குற்றமற்றவனை உற்ற தம்பியை
ஆவி போக்கி அவனது சொத்தை
அநுப விக்கவும் நினைவு கொண்டார்.

பிள்ளைபோல் வளர்த்தேன் பிரியமாய் வளர்த்த
கிள்ளையைப் பூனைக்குக் கொள்ளை கொடுப்பதா?
ஒரு லட்ச ரூபாய் வருவதை எண்ணி
உடன்பிறந் தானை ஒழிப்பது தருமமா?
அன்புதான் அவர் பால் அணுவும் இல்லையா?
ஆர் செயும் செய்கை? அக்கா! இதென்ன?

**கோகிலம்:**

ஐயா சொன்னார் நீயாது சொன்னாய்?

**ஆண்டி:**

ஆகட்டுமென்றுதான் சொன்னேன் அம்மா!

**கமலம்:**

உடன்பட் டாயா! உனக்குக் கோபால்
இடர் இழைத்ததென்ன அப்பா.

**கோகிலம்:**

அவனைக் கொன்றால் அவனது சொத்தை
அவர்தாம் அடைவார் உனக்கா அளிப்பார்?

**ஆண்டி:**

அவனைக் கொன்றால் ஆயிரம் ரூபாய்
அளிப்பதாக அவர் சொல்கின்றார்.

**கோகிலம்:**

ஒன்று சொல்வேன் உற்றுக் கவனி!
உன் எஜ மானனிடம் நீ உரைப்பாய்
கோபாலன் தனைக் கூட்டிக் கொண்டு போய்க்
கொல்லுதல் என்னால் கூடாது ஆயினும்
சின்ன கொய்யா பெரிய கொய்யா
என்னுமிருவர் இருக்கின்றார்கள்.
அவர்களால் இக்காரியம் ஆகும்
அவர்களை நாளைக் கனுப்புகின்றேன்
என்றுசொல் உன்றன் எஜமானிடத்தில்
எம்மிடம் சொன்னதாய் இயம் பொணாது.

**ஆண்டி:**

சரிதான் அம்மா! தங்கள் கோபால்
தாயற்ற பிள்ளை தந்தையை இழந்தவன்
சொத்துக் காகத் தொலைத்து விடுவதா?
சொத்தை வருத்தலாம். சோதரன் வருவனோ?

**கோகிலம்:**

இலஷம் ரூபாய் எளிதா அப்பா
எங்களிடத்தில் இந்தச் சேதியைச்
சொன்னதாகச் சொல்லி விடாதே
சொன்னால் நமக்கெல்லாம் துன்பம் நேரும்.

**ஆண்டி:**

அவ்வாறே ஆகட்டும் அம்மா.

**கோகிலம்:**

ஆண்டியப்பா மறவாதே யதை.

**ஆண்டி:**

இல்லை இல்லை இல்லை சொன்னதில்
இம்மியும் மறவேன் இருங்கள் ... ...

**கோகிலம்:**

... ... போய்வா.

**கோபாலன்:**

அண்ணீ நமது பெட்டையை அந்த
அண்டை வீட்டுச் சேவல் கொத்துது.

**கமலம்:**

துரைக்கண் அதைப் போய்த் துரத்துவான் நீவா
தோட்டக் கதவைப் பூட்டவில்லையா?
ஏதோ சேவல் இருக்கிறதாமே
எப்படி வந்தது? எங்குத் தூங்கினாய்?
மின்சாரவிசிறி விடு. வியர்க்குது.
மிட்டாய் கொண்டுவா. தம்பிக்கு வேண்டும்.

(ஒரு தட்டில் மிட்டாய் கொண்டுவந்து துரைக்கண் வைக்கிறான்)

**துரைக்கண்:**

ஐயாவுக்குக் காரை அவசர
மாக ஆண்டி அப்பன் ஓட்டிச்
சென்றான். சென்றவன் பங்களாக் கதவைத்
திறந்த போட்டுச் சென்றான். அதனால்
தெருவிலிருந்து சேவல் வந்து
சேர்ந்தது. தம்பிசொல்லத் தெரிந்ததம்மா.

**கமலம்:**

சேட்டுக் கடைக்குச் சென்றார் என்ன
செய்கிறார் என்று தெரியவில்லை
பன்னி ரண்டுமணி ஆகுது பசியும்
பார்ப்பதில்லை வார்த்தையே சதா.

**கோபாலன்:**

குச்சிநாய் வாங்கிக் கொடுக்கிறேன் என்றார்
கொடுக்க வில்லை கோபமாய்ப் பேசினார்
சைக்கிள் வாங்கித் தருவதாய்ச் சொன்னார்
சைக்கிளு மில்லை கிய்க்கிளுமில்லை.

**கமலம்:**

ஏன் தம்பீ நீ இன்று காலை
என்ன பாடம் எழுதிக் காட்டினாய்?
வாத்தியார் கொடுத்த பாடம் வந்ததா?
வகுப்பில் உனக்கு வாய்ப்பாடுண்டா?

**கோபாலன்:**

குச்சி நாய் வாங்கிக் கொடுப்பியா இல்லையா?

**கமலம்:**

கொடுக்கின்றேனே கொஞ்சம் பொறப்பா.

**கோபாலன்:**

சாப்பாட்டுக் கடைக்குக் கூப்பிட்டுப் போ எனை
அண்ணனிடம் இதைச் சொல்ல வேண்டாம்
அவரிடம் சொன்னால் என்னை அடிப்பார்
என்றைக்கு வாங்குவது? ... ... ...

**கமலம்: ... ... ...**

இன்றைக்கு வாங்கி அளிப்பேன் உண்மையே!

**கமலம்:**

பசிவேளையும் போய்ப் பகலும் போய் நல்ல
நிசிவேளை வந்தாலும் நீங்கள் - புசியாமல்
பேசிக் கொண்டே இருப்பீர் நானிதைக் கேட்டுவிட்டால்
ஏசிக் கொண்டே இருப்பீர் எப்போதும் ... ...

**ராகவன்:**

... ... ... ஊசிக்கு
வழியிருந்தால் நீயதை வாய்க்காலாய்ச் செய்வாய்
பொழியாதே வார்த்தைகளைப் போதும் - ஒழியாத
வேலை யேயல்லாமல் வீணில்லை நாளையதி
காலையிற் சென்று கணக்கிட்டு - மாலைக்குள்
வட்டிப் பணத்தை யெலாம் வாங்கிவிட வேண்டுமெனை
முட்டாள் என்றாநினைத்தாய் முட்டாள் நீ! - அட்டி என்ன
ஆசனத்தில் உட்கார்ந்தவனோடு கொஞ்சு கின்றாய்
போசன மருந்தப் புறப்படலாம் - நீ சற்றும்
தாமதிக்காதே தம்பி சாப்பிடுவோம் வாவாவா
ஊமையா நீ கமலம் ஒட்டாரமா- மயிலே
வருத்தமோ நேரம் வளர்த்தாதே - வாவா

**கமலம்:**

திருத்தம்சொல் கின்றீர் தெரியும் - தெரியும்
நிறுத்துங்கள் நான் சாப்பிட் டாயிற்று. நீங்கள்
உணவருந் துங்கள் உணவருந்தி விட்டு
முணுமுணுத் துச்சண்டை மூட்டித் - தணியாத
துன்பப் படுத்துங்கள் தொல்லையே யல்லாமல்
இன்பமுண்டா, இம்மியுண்டா. இல்லையா - அன்பான
வார்த்தையுண்டா? சொன்னால் வரும்கோபம் நாணந்தான்
பார்த்து வருகின்றேன் பத்தாண்டாய் - தீர்த்தேன்
அடியே அகிலாண்டம்! ஐயாவுக் கன்னம்
கடிதில் பரிமாறு கையில் - கொடு வெந்நீர்
ஆண்டியப்பா ... ...

**ஆண்டி:**

… வந்துவிட்டேன் …

**கமலம்:**

… … அக்காவைக் கூட்டிவா
வேண்டியபெட் ரோல்ஊற்றி வேகமாய்த் தாண்டிநட
காரைவிடு. கட்டாயம் நாலுமணிக் கெல்லாம்
காரணியிற் பங்களா வுக்குப்போய் - ஊருக்கு
நாலுநாள் தங்கி வரலாமாம் நாம்எனச் சொல்
ஏலுமா னால்விரைவில் இட்டுவா - கேலியல்ல.

**ராகவன்:**

தம்பிபடிப் புக்குத் தடங்கல் புரியாதே
தம்பியைவிட் டுப்போ தடையில்லை - தம்பி
இங்கே இருக்கட்டும் நானுமிருக் கின்றேன்
அங்கேஉன் அக்காவும் நீயும்போய்த் - தங்கி
இரண்டுநாள் சென்றவுடன் இங்குவந்து சேர்க.
சரி, நான்போய்ச் சாப்பிட்டு விட்டு - வருகின்றேன்.
கோகிலத்தம் மாவைப் போய்க் கூட்டிவா ஆண்டியப்பா!
வாயகலம் கொஞ்சமும் வேண்டாம் - போகநல்ல
பால்டின்கள் பிஸ்கட்டு, பழதினுசு மற்றவைகள்
கால்ஸிலிப்பர் கைப்பாட் டரிவிளக்கு - மேலும்
வியாதி எவற்றிற்கும் மின்சா ரரசம்
தயார் செய்து கொள் நீ… …

**கமலம்:**

… … சரி தான் - அயலாரால்
துன்பங்கள் நேர்ந்தால் துணையார் ரிவால்வாரில்
ஒன்று கொடுங்கள்! … …

**ராகவன்:**

… … நீ ஒன்றே - ஒன்று கொடு
கட்டி முத்தம் கன்னத்தில் (முத்தமிடல்) கண்மணியிதோ
வந்தேன்

**கமலம்:**

... ... ... பட்டான
தம்பி நீ வீட்டிலே தங்கிவிடு நாளைக்குப்
பொம்மைகள் சாக்லெட் புதியகுடை பைசீக் கல்
இம்மி தவறாமல் எல்லாம் நான் - மெய்ம்மையாய்
வாங்கி வருகின்றேன் வருத்தப் படாமலிரு
தூங்கி விழித்ததும் துரைக்கண்ணு - பாங்காகக்
காப்பி பல காரம் தருவான் கனமாக
ஆப்பில் பழந்தருவான் அக்காவைக் - கூப்பிட்டுக்
கொண்டு நான் போகின்றேன் அண்ணன் இருக்கின்றார்
அண்டையயல் வீட்டில் விளையாடாதே நொண்டி நாய்
வந்தால் அடிக்காதே பாடம் வரப்படுத்துக்
கந்தனும் நீயும் அதி காலையிலே - முந்தியே
பண்டியிலேறிக் கொண்டு பாடசாலைக் குப்போ.
குண்டு விளையாடக் கூடாது - ஒண்டியாய்
எங்கும் போ காதே.. ...

**கோபாலன்:**

... ... இருக்கட்டும் அண்ணி நான்
பங்களாப் பார்க்க வருகின்றேன். - அங்கு
மயில்கள் வளர்த்திருக்கும் மான்கள் இருக்கும்
குயில்கூவும் பூக்கள் குவியும் - வெயிலும்
தெரியாது. தென்ன மரத்தில் இளநீர்க்காய்
பெரிது பெரிதாக இருக்கும் - தெரியுமா?

**கமலம்:**

தம்பி மழைக்காலம் நீ வந்தால் சங்கடம்
வம்பு பேசாதே வருந்தாதே - நம்புவாய்
சொல்லுவதை அண்ணி நான் சொன்னபடி கேட்பதுதான்
நல்ல பிள்ளைக் கழகு நாகரிகம் - இல்லையா?

**கோபாலன்:**

எத்தனை நாள் அங்கே இருப்பீர்கள் ஐந்து நாள்
பத்து நாள் தங்கிவிடப் பார்ப்பீர்கள்....

**கமலம்:**

… … மொத்தம்
இரண்டு நாள் தங்கி உடனே வருவோம்
விருதாவாய். அங்கு வெகுநாள் - இருப்போமா.

(இதற்குள் அக்கா கோகிலம் வருதல்)

**கமலம்:**

ஏனக்கா நாம் அங்கே எத்தனை நாள் தங்குவது?

**கோகிலம்:**

போனவுடன் திரும்ப வந்திடுவோம்…

**கோபாலன்:**

… … … ஆனால் புளுகு முழுதும் புளுகு புளுகு
வெளியாகிப் போச்சுதுங்கள் வேலை - ஒளிவாய்
இரண்டு நாளில் வருவோம் என்று சொன்னீர்கள்
பெரியண்ணி போவோம் உடனே - வருவோம்
என்றார் இரண்டும் புளுகல்ல வா அண்ணி!

**கமலம்:**

என்னக்கா இப்படிநீ சொல்லிஎன் வார்த்தையைச்
சின்னம் புரிந்துவிட்டீர்… …

**கோகிலம்:**

… … சீச் சீ போ - என் கண்ணே
நான் சொல்லும் வார்த்தையைக் கேள் காரணிக்கு நாங்கள் போய்
மான்போல ஓடி வராவிட்டால் - ஏனென்று
கேள் என்னைக் கேலிக்குச் சொல்லவில்லை உண்மையிது
போளி, பகோடாகாரப் பூந்தியல்வா - நாளை
வரும் போது வாங்கி வருகின்றோம் தம்பி
தரும் போது சந்தோஷமாக - இருக்கும் பார்.

- *ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதாமண்டலம்* (மாத இதழ்),
புத்தகம்-1; வெளியீடு-1, புதுச்சேரி, 1935.

(ராகவன் வருதல்)

**கோகிலம்:**

வாருங்கள் அத்தான்! … ….

**ராகவன்:**

… … வருக வருக இன்று
காரணிக்குக் காரில் பயணமோ?…

**கோகிலம்:**

… … நீரும்
கமலமும் சண்டையிடக் காரணமே வேண்டாம்
உமக்கும் அவளுக்கும் வீடு - சமர்க்களம்
எப்போதும் சண்டை! எதற்கும் மனக்கசப்பு!
இப்போதிங்கென்ன நடந்தது - செப்புங்கள்?

**ராகவன்:**

ஒன்றுமில்லை! ஒன்றுமில்லை! ஊருக் கிருவரும்
சென்றுவாருங்கள் தெரியுமம்மா - ஒன்று நான்
சொன்னால் நீர் ஒன்பது சொல்வீர்கள்! உம்மிடம்
என்னால் எதுவும் முடியாது! - அந்யாய
காலமிது, பெண்கள் சுதந்திரமாம்! கல்வியாம்!
கேலிக்கூத் தாயிற்றுக் கேட்டால் - சேலையும்
வேண்டாம் என் பார் பெண்கள் வேட்டிதான் வேண்டுமென்பார்!
ஏண்டி கமல முனக் கென்னென்ன - வேண்டுமென்றேன்
தோட்டா ரிவால்வார் கொடுவென்று சொல்லுகின்றாள்
கேட்டாளா இல்லை யா கேளுங்கள்?….

**கோகிலம்:**

… … கேட்டாயா?

**கமலம்:**

ஆமாம்; அதனாற் பிழையென்ன சொல்லுங்கள்?
தீமை அயலார்கள் செய்ய வந்தால் - நாமே
நமைக் காத்துக் கொள்வதுதான் நன்று! - சுமை தூக்கச்
சும்மாடு கோலுவதும் தீதாநீர் சொல்லுங்கள்!
இம்மா நிலத்திலே எவ்விடத்தும் - பொய்ம்மையுளம்
வஞ்சகமும் சூதும் மலிந்திருத்தல் நாமறிவோம்

வஞ்சியர்கள் என்றால் மகிதலத்தில் - பஞ்சாய்
மதிக்கின்றார்! .. .. ....

**கோபாலன்:**

பார்க்கின்றேன் உங்களது பச்சைப் புளுகையெல்லாம்
ஊர்க்குப் போகின்றீரோ! உம்! போங்கள் - பார்க்கின்றேன்!

(பையன் உள்ளே ஓடிவிட்டான்)

**கார் ஓட்டி:**

கார் வந்து நிற்கிறது காத்திருக்க வேண்டாம்; அவ்
வூர்மிகவும் தூரம் உணர்ந்தீரா - நீர் விரைவில்
ஏறுங்கள்! எல்லாம் தயார்செய்தும் ஆயிற்றே
ஏறுங்கள்! ஏறுங்கள்! ... ...

**கோகிலம்:**

... ... என்னப்பா! - கூறுவது?
காதில்தான் கேட்கிறதே! காக்கைபோல் கத்துவதா?
போதும் நிறுத்து! வருகின்றோம் - வாதனை
செய்யாதே வந்து விட்டோம்! வந்தாயேடீ கமலம்!

(கோபமாய்)

செய்யாத தாமதம் நீ செய்!

(உடனே கமலம் கோகிலம் இருவரும் காரில் ஏறிமறைதல்)

## காட்சி - 2

(புதுச்சேரியில் "வசந்த விலாசம்" என்ற போஜனசாலை; அது சிற்றுண்டிக்கும், போஜனத்துக்கும் வசதியுள்ளது. மேலும், உயர் வகுப்பு மாணவர்களும் உள்ளூரினரும் தங்கியிருக்கவும் வசதியுள்ளது.)

(ஒருபுறம் சீட்டாட்டம் நடக்கிறது)

### விருத்தம்

**நாராயணன்:**

இரு நூறு! ... ...

**கண்ணன்:**

துருப்பென்ன? ... ...

**நாரா:**

... ... துருப்பு க்ளாவர்!

**ராகவன்:**

இறங்கு நாராயணன்! நீ தான் இறங்கு!

**நாரா:**

சரி சரி நீ ஆடினது போதும் போதும்
தட்டி வாங் கிடவேண்டும் துருப்பை - உன்றன்
கருத்தெல்லாம் எங்கேயோ இருக்கு தப்பா!
கவலையோ ராகவா? உடம்புக் கென்ன?
குரங்குபோல் விழிக்கின்றாய் - ஆடும் போதே
குறுக்கில்எழுந் தெழுந்து நீ வெளியிற் சென்றே
ஆரையோ பார்க்கின்றாய்! உனது சிந்தை
ஆட்டத்தில் இல்லவே இல்லை யப்பா.

**கண்ணன்:**

தேர்பார்க்க ஓடுகின்ற குழந்தையைப் போல்
தெருவை நோக்கிச் செல்கின்றாய்! விரைவில்
ஆர் அங்கே என்கின்றாய் வழிப்போவாரை!
அழுமூஞ்சி கொண்டு விட்டாய் என்னசேதி?

**ராகவன்:**

ஓர் இழவுமில்லை! சும்மா விளையாடுங்கள்

**நாரா:**

உன் இழவு, வேண்டாமே! நிறுத்தாட்டத்தை.

(ஆட்டம் கலைகிறது; ராகவன் போஜன சாலையின் தெருக் குறட்டில் நின்று யாரையோ எதிர்பார்க்கிறான்; சின்ன கொய்யா, பெரிய கொய்யா என்ற இரு காரோட்டிகள் மழை யுடையுடன், குடியால் தள்ளாடும் நடையுடன் வருகிறார்கள்.)

**ராகவன்:**

(காரோட்டிகளைச் சமீபத்தில் அழைத்துப் பரபரப்புடன்)

என்ன நடந்தது? மெதுவாய்ப் பேசுங்கள்! நீர்
எவ்விதத்தில்? எவ்விடத்தில் வேலை தீர்த்தீர்?
சின்ன குரலால், மெதுவாய், பிறர் கேட்காமல்,
தெரிவியுங்கள்! சொன்னபடி செய்திட்டீரோ?

**பெரிய கொய்யா:**

சொன்னபடியே காரை ஓட்டிச் சென் றோம்
சோதரன் - அக்கோ பாலன் பாடசாலை
தன்னிலிருந்தான். பதினொன் றரை மணிக்குத்
தான்வெளியிலே வந்தான். நாங்கள் கண்டு
அண்ணன் உனை அழைத்துவரச் சொன்னார் என்றோம்.
அப்படியா? ஏன்? என்றான். அவரும் நீயும்
அண்ணியைப் போய் அழைத்துவர வேண்டும் காரில்
அதிவிரைவில் ஏறென்றோம். ஏறிக்கொண்டான்.
கண்ணழகும் மூக்கழகும் உம் தம்பிக்குக்
காலழகும் மேலழகும் பார்க்கப் பார்க்க
எண்ணத்தைக் கவர்ந்தன! அப் பையனைப் போல்
எவ் விடத்தும் பார்த்ததில்லை. தங்கப் பொம்மை!

மாணிக்கம் சிந்துகின்ற நகைப்பு ! நீல
மாமணிபோற் கருவிழிகள்! முத்துப் பற்கள்!
ஆணிப்பொன் மெரு கடைந்த அழகுமேனி
அடுக்கிவரும் மழலைமொழி அமுது! தங்கத்
தூணை - அந்தோ! தூங்கா விளக்கை - நல்ல
சுடர்க்கொழுந்தைத் துடிக்கும் வண்ணம்
வாள் நுனியால் முடித்துவிட்டோம்! ஒழிந்து போனான்;
மண்ணுக்குள் புதைத்து விட்டோம்! வந்துவிட்டோம்!

**ராகவன்:**

ஒருவருக்கும் தெரியாதே? (சுற்றுமுற்றும் பார்த்தல்)

**பெரிய கொய்யா:**

... ... கோரிமேட்டில்
ஒருவருமில்லை முந்திரித் தோப்புக்குள்!

(இதற்கிடையில் ஒருபுறமிருந்து மற்றொருபுறம் செல்லும் கந்தன் ராகவனை நோக்கிச் சொல்லுகிறான்)

**கந்தன்:**

தெரிகிறது தெரிகிறது சேதி யாவும்!
தெரிகிறது ராகவா நன்றாகச் செய்!

(ராகவன் திடுக்கிட்டு கந்தன் பின் அணுகி இரக்கமாய்)

**ராகவன்:**

தெரிகிறதா? இந்நேரம் எங்கிருந்தாய்?
சேதிஎன்ன ஒன்றுமில்லையே! ஏன் கந்தா!
ஒரு வார்த்தையும் பேசா திருக்கின்றாயே?
உனக்கும் எனக்கும் வெகுநாள் நேசமாச்சே!

**கந்தன்:**

பேசிக் கொண்டிருந்ததெலாம் தெரியும். உன்வாய்ப்
பிறப்பை அறிவதற்காகத்தான் கேட்கின்றேன்.

**சின்னகொய்யா:**

(கோபமாய்)

சீ சீ போ முட்டாளே! தெரிந்ததாம்! நீ
தெரிந்து கொண்டால் என்னடா முழுகிப் போகும்?

**கந்தன்:**

ஆசாமி யாரப்பா ராகவா! நான்
அவனோடு பேசவில்லை. அவன் தான் என்னைப்
பேசுகின்றான். பல்லெல்லாம் உதிர்ந்து போகும்!
பெயர்த்து விடுவேன் மூக்கை வாடா இங்கே!

(கந்தன் சின்னகொய்யாவின்மேல் செல்லுகின்றான். ராகவன் குறுக்கிட்டு)

**ராகவன்:**

அவசரப்படாதே! அப்பிள்ளை யாண்டான் அறியாமற்
சொல்லிவிட்டான். என்முகம் பார்! தவறிவிட்டாய்
சின்னகொய்யா இதெல்லாம் என்ன சரியில்லை; சிறுவயது
நண்பன் கந்தன் கவலைப் படாதே கந்தா பொறுப்பாய்!
கனவானை - ஒரு பெரிய மனிதனை நீ அவசரப்பட்
டிவ்வாறு பேசலாமா?

**கந்தன்:**

அந்தண்டை விலகுநீ உதைக்க வேண்டும்!

**பெரிய கொய்யா:**

(இடைமறித்து)

பிழைசெய்தாய்; அவர் பெரிய மனிதர் வீட்டுப்
பிள்ளையென்றும் நீ சிறிதும் நினைக்கவில்லை.

**கந்தன்:**

தழைத்த குடும்பத்தைச் சேர்ந்தவன் யான் - என்றன்
தந்தை பெயரைச் சொன்னால் இந்தஊரில்
அழுதபிள்ளை வாய்மூடும்! அவர் எழுத்தோ
அச்சுப் போலே இருக்கும்! கணக்கப்பிள்ளை

எழுத்தாணி பிடித்தெழுத இந்த ஊரில்
எவனிருக்கின்றான் என் தந்தை யைப் போல்?

**பெரியகொய்யா:**

வெள்ளி ஜரிகை வாங்கி இங்கிருந்து
வெளியூருக் கெடுத்துப் போய் விற்ப துண்டு;
வெள்ளையாய்ச் சொல்லி விட்டேன் அதுதான் சேதி.
மெதுவாக, ரகசியமாய், அதைப் பற்றித்தான்
உள்ளபடி பேசிக் கொண்டிருந்தோம். நீவிர்
ஒளிந் திருந்து கேட்டிருந்தீர். அதனா லென்ன?

**கந்தன்:**

உள்ளதுதான்! ராகவன் சம்பாதிக்கட்டும்
உன்னைப்போல் எனக்குமதில் சந்தோஷந் தான்!

**ராகவன்:**

இருக்கட்டும் கந்தா நீ போய்வா இந்த
இரகசியத்தை வெளிப்படுத்த வேண்டாம்
சரி, நேரம் ஆகிறது. போய்வா அப்பா!
தயவிருக்கட்டும் போய்வா கந்தா போய்வா.

**கந்தன்:**

இருக்கட்டும்! அதற்காகச் சொல்லவில்லை
என் தந்தை மிக்க சிவப்பாயிருப்பார்
பருத்த உடல்! ராஜாவைப் போன்ற மேனி!
பச்சைப் பட்டுச்சட்டை போட்டிருப்பார்.
முறுக்கி விட்ட மீசையிலே எலுமிச்சங்காய்
மூன்று நிற்க வைத்திடலாம்! தெருவில் வந்தால்
குறுக்கில் ஒருமலை புரண்டு வருவதொக்கும்!
குதிகாலில் தொங்கும் அவர் கட்டும் வேட்டி.
நறுக்காக ஒன்றுசொன்னால் நாலு சொல்வார்!
நாழிகைக்கு மூன்றுமைல் நடந்து போவார்!
சிறுவிரலில் தம்பாக்கு மோதிரத்தைத்
தேய்த்துக் கொண்டேயிருப்பார் பட்டுத்துண்டால்!

**சின்னகொய்யா:**

கண்மூக்கு வாய்குடுமி இவற்றில் மற்றும்
கவனிக்க வேண்டிய விசேஷம் உண்டோ?

உள்நாக்கு க்ஷேமமா? அதனை மாத்ரம்
உரையப்பா! ஏனப்பா உன் தந்தைக்குப்
பிண்ணாக்குப் பிடிக்குமா தின்பதற்குப்
பிரியமாய்த் தின்பதெது? சொல்வாயப்பா?
அண்ணாகேள்! நன்றாய்க்கேள்! அவர் அப்பாவின்
அரியபெருஞ் சரித்திரத்தை! தொடங்கு கந்தா!

**கந்தன்:**

சின்னகொய்யா கேலியா என்னை இன்னம்
செய்கின்றாய்! தெரியும் நீ வாயை மூடு!

**ராகவன்:**

சின்னகொய்யா! கேலி ஒன்றும் செய்ய வேண்டாம்
தெரிகிறது கந்தா நீ போய்வா - எல்லாம்
பின்னால் பேசிக்கொள்வோம் நேரம் ஆச்சு.
பெரியதொரு வம்பன் நீ சின்ன கொய்யா!

**கந்தன்:**

என்னத்திற்காக நான் சொன்னேன் என்றால்
எளிசாக எனை நினைத்தான் பிள்ளை யாண்டான்.
என் தகப்பன் பெண்கொண்ட இடமும் மெய்யாய்
எளிசான இடமல்ல சொல்லி வைத்தேன்.
என் தகப்பன் மாமன்பேர் ராமசாமி
இதோ ஆண்டிப் பாளையந்தான் விசாரித்துப்பார்!
தின்னாத மருந்தில்லை தின்றாயிற்றுச்
செய்யாத வைத்தியங்கள் செய்யச் செய்த
பின்புதான் சௌக்கியமாயிற்றுச் சாதிப்
பெரிய தனக்காரர் அவர்! அற்பர் அல்ல!

- *ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதாமண்டலம் (மாத இதழ்),*
*புத்தகம்*-**1;** *வெளியீடு*-**2,** *புதுச்சேரி*, **1935.**

(கந்தன் தன் பெருமைகளையெல்லாம் இன்னும் சொல்லு கிறான். ராகவன், சின்ன கொய்யா, பெரிய கொய்யா அனைவரும் உட்கார்ந்து கொட்டாவி விடுகிறார்கள்.)

**ராகவன்:**

நானறிவேன் உன்குடும்பப் பெருமை யெல்லாம்
நல்லது நீபோய் வருகின்றாயா கந்தா!

**கந்தன்:**

கூனிச்சம் பட்டுக் கிராமந் தன்னில்
குள்ளப்பன் என்றொருவன் வாழுகின்றான்.
நானந்த மனிதனையே பார்த்ததில்லை;
நல்லவன் தான். யாராலே வந்த வாழ்வு?
போன வருஷந்தான் என் தகப்பனாரைப்
புதுநடவுக் காக என்று ரூபாய் கேட்டான்.

அவனுக்கும் தகப்பனார் பத்து ரூபாய்
அடமானம் இல்லாமல் கடன் கொடுத்தார்!
அவனந்த ரூபாயால் அதிக லாபம்
அடைந் தானா இல்லையா அது தான் கேள்வி.
எவன் கேட்டாலும் கொடுப்பார் எனது தந்தை
இருபது ரூபாயின்னம் உண்டு கையில்!
சவரன் ஒன்று முந்தாநாள் காப்படிக்க
வாங்கினார் அம்மாவுக் கந்தக் காப்பு

என்னிடத்தில் இருந்தாலும் பிச்சைக்காரர்
எவர்வந்து கேட்டாலும் இரண்டு காசை
அன்போடு கொடுப்பதுண்டு; போகட்டும் போ
அவனுந்தான் சாப்பிடட்டும் என நினைப்பேன்!
தென்னமரக் குத்தகைக்குப் பணமில் லாமல்
செட்டியார் ஒருவரிடம் பணம்போய்க் கேட்டேன்.
என்ன சொன்னார்! சரியப்பா போய்வா கந்தா
இரண்டுநாள் போகட்டும் என்று சொன்னார்.

நாணயத்தை விடலாமா இல்லா விட்டால்
நம்மைஎவர் நம்புவார் சொல்லும் பார்ப்போம்?
கோணல் நடை ஒரு சிறிதும் பிடிப்பதில்லை
கொதிசோற்றுக் கொருசோறு பதம் என்பார்கள்.
நாணாமல் வாங்குவதும் கேட்கும் போது
நட்டதலை நட்டபடி விழிப்பதும் வீண்!
தூணாநாம், மனிதனா நீரே சொல்லும்.

(இதற்குள் ராகவன் முதலியவர்கள் தூங்கி விடுகிறார்கள். கந்தன் மேலும் சொல்லிக் கொண்டே போகிறான்)

**தூக்கமா? ... ...**

**ராகவன்:**

**... இல்லை இல்லை! சொல்லுகந்தா!**

(கந்தன் மேலும் சொல்லுகிறான்)

**மாமனார் வீட்டுக்குப் போக வேண்டும்**
**மாட்டுவண்டி நல்லதா? நடந்தால் என்ன?**

**சின்னகொய்யா:**

(இடையில்)

**சாமியைத்தான் கூப்பிட்டுக் கேட்க வேண்டும்**
**சங்கரயரைக் கேட்டால் சொல்லு வாரே!**
**தீமை ஒன்றும் செய்யாமல் - இவ்விடத்தில்**
**சிக்கி விட்டோம் இப்பெரிய சிறைச் சாலைக்குள்**
**ஊமையைப்போ லிருந்தாலும் விடுவ தில்லை!**
**உரையப்பா கந்தப்பா! இந்தப் பாடா?**

(பெரியகொய்யா விழித்துக் கொண்டான்)

**பெரிய கொய்யா**

**இன்னுமா இவ்விடத்தில் இருக்கின் றாய் நீ?**
**இவ்விடத்தில் நேற்றுவந்தாய். இன்றேன் வந்தாய்?**

**சின்னகொய்யா**

**நன்றண்ணே! நன்று நன்று! விடிந்து போச்சு**
**நான் கொண்டு வரட்டுமா பல் தூள் அண்'ணா!**
**இன்னுந்தான் கந்தப்பர் கதைகள் சொல்ல**
**இங்குவந்தார். நெடியகதை! கேட்டுக் கொள்ளும்.**

**ராகவன்:**

**அன்றன்று! விடியவில்லை தூங்கினாய் நீ.**
**இடையில் விழித்தாய்! அது தான் நடந்தசேதி.**

**கந்தன்:**

அதற்கு நான் சொல்லவில்லை; எதற்கென் றால்நான்
அவ்வளவு கேடுகெட்ட மனிதனல்ல.
இதுநேரம் ஐந்தாறு ரூபாய் வேண்டும்
எவரிடத்தில் கேட்டாலும் வந்தே தீரும்!
அதனால் நான் எந்தவித மனிதன் என்ப
தறிந்து கொள்ள முடியாதா நீரே சொல்லும்!
இதையெல்லாம் யோசிக்க வேண்டாமா நீர்?
இதுமட்டுமா இன்னும் சொல்லுகின்றேன்.

(இதற்குள் கந்தனின் மைத்துனன் சுந்தரன் வந்து, கந்தனை நோக்கிச் சொல்லுகிறான்)

**சுந்தரன்:**

என்னடா இங்குவந்து புளுகுகின்றாய்!
ஏன் கந்தா? சிகரெட்டுக் கடையிற் சென்றே
என்னமோ வாங்கினையாம்; காசு கேட்டான்
இல்லையென்று சொல்லிவிட்டு வந்தா யாமே!
உன்னாலே எனக்கிங்கே கெட்ட பேர்தான்
உண்டாகி விட்டதடா இதெல்லாம் என்ன?
முன்னே நீ கடைக்காரன் காலணாவை
முடிச்சவிழ்த் தேனும் கொடுத்து மறுவேலைபார்!

(கந்தன் ஓட்டம் பிடித்தான்; சுந்தரனும் மறைந்தான்)

**சின்னகொய்யா:**

(சிரித்து)

பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளை யாண்டான்!
பெரிய தொகை! காலணா! அடடா என்ன
பெரிய மனிதர் பார்த்தீரா அண்ணாத்தை?
பெரும் பெரிய மகாபெரிய மனித ரன்றோ?

(ராகவனைப் பார்த்து)

தெரியாத மனிதரையா நீவிர்! அந்தத்
தெக்கணா முட்டியிடம் என்ன வார்த்தை?

உரிய நம் இரகசியத்தை நீரே இந்த -
ஊராரைக் கூப்பிட்டுச் சொல்வீர் போலும்;
– ராகவன் வேண்டுகோள்.

**ராகவன்:**

சொல்லிவிடப் பார்த்தேன் ரகசியத்தைச்
சொல்லாமல் தந்திரமாய் நீர் தடுத்தீர்.
இல்லை ஐயா என்நினைவே என்னி டத்தில்!
என்ன செய்வேன்! என் மனம் ஓர் நிலையிலில்லை,
செல்லுவது சரியல்ல. என் வீட்டுக்குச்
சென்றாலோ குட்டுவெளிப் பட்டே போகும்!
இல்லத்தில் என் மனைவி வந்தி ருப்பாள்
இன்றிரவை இவ்விடம் நான் கழிக்க வேண்டும்.

இன்றுவரை என்னோடு நீங்கள் தங்கி
இருந்து நாளைக்குப் போய்விட லாம்இந்த
ஒன்று மட்டும் தயைபுரிந்தால் போதும். தக்க
உபகாரம் செய்கின்றேன் மாற்ற மில்லை
என்சொல்கின் றீர்கள் இதற் கன்பரே நீர்?
எது கேட்டாலும் தருவேன் அட்டி யில்லை.
இன்று மட்டும் என்னுடன்நீர் இருங்கள் நாளை
என்வீடு சென்றிடுவேன். என்சொல் கின்றீர்?

**சின்னகொய்யா**

நீங்கள் எதற்காக மனம் சிதற வேண்டும்!
நிலைகலங்கிப் போகின்றீர் இது விநோதம்!
நாங்களன்றோ பிள்ளையினைக் கொலை புரிந்தோம்!
நாங்களன்றோ பரிதாபக் காட்சி கண்டோம்!
ஈங்குமைப்போல் நாங்களு மிருந்தோமானால்,
இளைய வனின் கழுத்தறுக்க முடிந்தி ராது!
ஏங்கினான் சிறு பையன் தோப்புக் குள்ளே!
எங்கிருக்கின்றார் அண்ணன் என்று கேட்டான்.

## கொலை செய்த விதம்

**சின்னகொய்யா:**

இதோபாரடா என்று பெரிய கொய்யா
எடுத்துயர்த்துக் காட்டி னான் பட்டாக்கத்தி!
விதிர் விதிர்த்துப் படபடத்து வெருண்டு பையன்
வீணைமொழியாற் கெஞ்சிக் காலில் வீழ்ந்தே
எதுவேண்டும் என்னுடைய நகைகள் எல்லாம்
எடுத்துக் கொள்ளுங்கள் எனைவிட் டிடுங்கள்!
உதைக்காதீர்! அடிக்காதீர்! எனக்கு நோகும்!
உங்களை நான் கும்பிட்டேன் என்று சொன்னான்.

அதுசமயம் நானவனைத் தூக்கி மண்ணில்
அறைந்தேனா ஆஆ வென் றலறி வீழ்ந்தான்!
புதுக்கத்தி! கூர் இல்லை! கழுத்தில் வைத்தான்
பொன்னான சிறுகழுத்தில் பாயவில்லை!
கதியற்றுத் துடித்தாலும் ஆவ தென்ன
கண்ணீரோ ஆறாகப் பாய்ந்த தையா!
மிதித்தேனா அவன் தலையை! புழு வைப்போல
மேலுமேலுந் துடித்தான்! கழுத்தில் ரத்தம்!

கொஞ்சந்தான் அறுபட்ட தவ்விடத்தில்!
கூராகப் பட்டாவைத் தீட்ட எண்ணிக்
கொஞ்சதூரம் சென்றான் பெரிய கொய்யா
குடம்குட மாய்ப் பச்சை ரத்தம் கழுத்தினின்று
மிஞ்சியது! ரத்தத்தில் சுழன்றான் பையன்!
விடுவிடென்று துடித்ததவன் தேகம்! கண்ணாற்
கெஞ்சினான்! வீறிட்டுக் கத்தி விட்டான்!
கிளிப்பச்சைப் பட்டெல்லாம் ரத்தச்சேறு!

*- ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதாமண்டலம் (மாத இதழ்),*
**புத்தகம்-1; வெளியீடு-3, புதுச்சேரி, 1935.**

(தன் தம்பியைக் கொலைசெய்த விவரத்தைச் சின்ன கொய்யா வாற் கேட்டவுடன் ராகவன் சிறிது இரக்கமுடன் கூறுகிறான்.)

**ராகவன்:**

இவ்வளவு பாடெதற்குப் படுத்தினீர்கள்?
இருதுண்டாய் வெட்டிப்போட் டிருக்கலாமே!
அவ்விடத்தில் அப்போது மற்றயாரும்
அணுகினரா? குட்டுவெளிப் பட்ட துண்டா?

செவ்வையாய் அதனைஉரை. அதுதான் நன்று!
செய்தவற்றைப் பின்னும் நீ உரைக்க வேண்டாம்!
அவ்விடத்தில் கொலைசெய்யும் போது பையன்
அழுதானா? யாரேனும் கேட்டிட்டாரா?

(சின்ன கொய்யா மேலும் சொல்லுகிறான்)

**சின்னகொய்யா**

நான் சொல்லுவதை யெல்லாம் உற்றுக் கேளும்
நடந்த வற்றை நடந்தபடி சொல்லு கின்றேன்.
ஏனதற்குள் அவசரப் பட்டுப் போகின்றீர்?
எல்லாவற்றையும் கேட்டுக் கொள்ள வேண்டும்.
தேனைப்போல் இனித்திடும் அப்பையன் பேச்சுத்
திணறிற்று! வழவழெனக் குளறலாச்சு!
வானத்தைப் பார்த்தபடி விலவிலத்து
மல்லாந்து தேகத்தை அசைக்கப் பார்த்தான்
மாணிக்கம் போன்றிருந்த உதடு மட்டும்
மடமடென ஆடிற்று! மார்பில் மட்டும்
காண முடிந்ததுப்ராணன்! காயத்தின் வாய்
கருத்ததுபின் ரத்தத்தின் கறையால் தேகம்!
வேணமட்டும் கருமை நிறம் அடைந்து போச்சு
விரித்தகை விரித்தபடி இருந்த தங்கே
ஆணழகன் - இளங்காளை அழகை யெல்லாம்
ஆரெடுத்துப் போனாரோ அந்த வேளை!
கொஞ்சநேரம் செல்லப் பையன் தேகம்
குலுங்கிற்று. வளையம்போல் சுழல லாச்சு.
பஞ்சுமெத்தை மீதினிலே படுக்கும் பிள்ளை
பரிதாபமாய்த் தரையில், ரத்தம் தோய,
மிஞ்சுகினற் வாதையினால் துடித்தல் கண்டோம்!
மெய்யாக எங்கள்மனம் சகிக்க வில்லை!
அஞ்சுதடா தம்பி! எனப் பெரியகொய்யா
அலறினான் நான் சொன்னேன் அவனிடத்தில்
தந்தையுமாய் அன்னையுமாய் இருந்த அந்தத்
தனவந்தர் ராகவ னார் வாயே நம்மை
இந்தவிதம் கொலைசெய்யச் சொன்ன தென்றால்
இரக்கமென்ன? நாமிருவர் கூலிக் காரர்!

வந்த காரியம் முடிப்போம். குழியைத் தோண்டு
வாய்ப் பேச்சுப் பேசாதே என்று சொன்னேன்.
அந்தவிதமே பறித்தான் பெரிய கொய்யா
அதுசிறிதாய் இருந்ததனால் துண்டு போட்டே

(ராகவன் இது கேட்டு மனம் சகிக்காதவனாய்க் கூறுகின்றான்.)

**ராகவன்:**

ஐயையோ என்னருமைத் தம்பி! என்ன
அரும்பாடு படலானாய்! எனது நெஞ்சம்
நெய்யாக உருகுதடா! என்னதான் நீ
நினைத்தாயோ அந்நேரம்! ஐயா நான்தான்
துய்யவனை உடன் பிறந்த இளையோன் தன்னைத்
தொலைத்துவிடச் சொன்னாலும், நீங்களேனும்
செய்குவது சரியல்ல என்று சொல்லித்
திருத்தலா காதா என் உளத்தின் போக்கை?
இவ்வளவு துன்பங்கள் எந்தம் பிக்கே
இருக்குமென நானினைத்தால் சொல்லு வேனா?
அவ்விடத்தில், என்தம்பி உடலைத் தூக்கி
அடித்தீரா! துடித்தானா! விழியிரண் டும்
எவ்வாறு சுழன்றனவோ! எவ்வாறந்த
இளம்பிள்ளை வருந்தினனோ அந்தோ! அந்தோ!
கவ்விற்றோ சாவுவந்து தம்பீ உன்னைக்
காண்பதெந்நாள், என்னப்பா! அருமைப் பிள்ளாய்

(வீழ்ந்து மூர்ச்சையாகிறான்)

- *ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதாமண்டலம்* (மாத இதழ்),
புத்தகம்-1; வெளியீடு-4 & 5, புதுச்சேரி, 1935.

(தன் தம்பி கொலை செய்யப்பட்டபோது அவன் பட்ட பாடுகளைச் சின்ன கொய்யாவால் கேட்டதும் ராகவன் தன்னை மீறிய இரக்கத்தால் வருந்துகிறான்; அவ்வருத்தத் தின் முதிர்ச்சியால் சோகமுற்றுமண்ணிற் சாய்ந்தான். சின்ன கொய்யா பெரிய கொய்யா இருவரும் அவனைத் தேற்று கிறார்கள்.)

**சின்னகொய்யா**

ஐயா! ஐயா! என்ன அதிசயம்!
ஐயா ஐயா எழுந்திரும் ஐயா,
மனதை விடாதீர் எழுந்துவாரும்!
வழியில் விழுந்து கண்ணீர் விடுகிறீர்
வருவார் போவார் என்ன மதிப்பார்?
தெரிந்து கொள்வார் நமது சேதி!
எங்களுக் கன்றோ தண்டனை ஏற்படும்
எழுந்திருமையா - ஏஏ இதென்ன!
ஐயா! ஐயா என்ன அதிசயம்!
அத்தனை சோகமா இதென்ன அவதி!
உம்மைத் தாமே ஐயா உம்மைத்தாம்
உடனே எழுந்திரும் உம்மைத் தாமே

**பெரிய கொய்யா:**

சோகத்தோடு மயக்கமும் சூழ்ந்தது.
தொந்தரவு கொடுக்க வேண்டாம் சொல்கிறேன்.
உடனே ஓடி உள்ளே இருக்கும்
விசிறியை எடுத்து விரைவிலே வா!

(சின்ன கொய்யா விரைவில் ஓடி விசிறி எடுத்துக்கொண்டு வருகிறான்)

விசிறு விசிறு நன்றாய் விசிறு!
தண்ணீர் கொஞ்சம் சடுதியில் கொண்டுவா.

(சின்னகொய்யா ஓடித் தண்ணீர் கொண்டு வருகிறான்)

உண்ணாக்குத் தொண்டையில் ஊற்றுக் கொஞ்சமாய்த்

**ராகவன்:**

தம்பி! (எதிரில் இருவரையும் பார்த்து)
... நீங்களா? கொன்றீரா தம்பியை?

**பெரிய கொய்யா**

சடுதியில் எழுந்திரும் ரகஸ்ய சங்கதி!
உள்ளே சென்று நீர்ஒருபக்கம் படும்!

(சின்ன கொய்யாவை நோக்கி)

**தூக்கடா தம்பி! தூக்குத்**
**தோளைப் பிடித்துத் தூக்கித் தொலைய டா!**

(இருவரும் ராகவனைத் தூக்கி நடத்திப் போய் உள்ளே ஒரு பக்கம் போட்டிருக்கும் சாயுமான நாற்காலியில் வளர்த்துகிறார்கள்.)

## வேறு சந்தர்ப்பம்

(வசந்த விலாசம் என்ற அந்தப் போஜனசாலையில் தங்கி யிருக்கும் உயர்வகுப்பு மாணவர்கள் பலர் போஜனம் முடித்துத் தம்மில் கூடிப்பேசிக் கொள்ளுகிறார்கள்.)

**நாராயணன்:**

வெண்டைக்காய்ச் சாம்பார்தான் கொஞ்சம் விசனசுரம்!
சுண்டைக்காய் வற்றல் சுகமாயிருந்த தப்பா!

**குழந்தை:**

இன்றைக் கெனக்கோ எதுவும் பிடிக்க வில்லை.
நன்றாயிருந்தவைகள் வாழையிலை நல்ல தண்ணீர்!

**முத்து:**

உப்பிலும் ஓர் தப்பில்லை உப்பளத்தின் நல்லருளால்!
அப்பளந்தான் வைக்கவில்லை அந்த மட்டும் தப்பித்தோம்!
சீரகச்சம்பா அரிசிச் சித்ரான்னத் தோடுவரு
வோருக்குச் சாப்பாடு வடிப்போம் என்று சொல்லிக்
கல்லோடு சேர்ந்த கழுதைச் சம்பா வடித்து
மல்லையிலே புளித்த மோரைத்தான் வார்க்கின்றார்.

**கந்தப்பன்:**

நாமோ வெளியூரார் வாசிக்க நாடி வந்தோம்.
தாய்மறந்து தந்தை தமைமறந்து சாப்பாட்டுச்
சாலையிலே தங்கித் தகுந்த படி சாப்பிட்டுக்
காலத்தைக் கல்விக கவனத்தில் போக்கல்

நமது கடமை இதற்கு நடுவில்
நமைநாம் அடக்கி நடந்திடுதல் வேண்டுமன்றோ!
எத்தனையோ போஜன சாலைகளை இன்றுவரை

நத்தினோம் நாமெதைத்தான் நல்லதென்று சொன்னதுண்டு?
சங்கரனின் சாப்பாட்டுச் சாலையிலே சாப்பிட்டோம்
அங்கிருந்து பாய்ந்திட்டோம் அம்மணிவி லாசத்தில்!
சண்டை வளர்த்துச் சவுகரியம் இல்லை யென்றே
மண்டித் தெருவுக்கு வந்தோம்; அதன் பிறகு
மீதியுள்ள சோற்று விடுதி யெல்லாம் பார்த்துவிட்டுச்
சோதி பவனத்தைத் தொட்டோம்; அதை விட்டோம்.
இங்குவந்தோம் குந்தினோம் இக்கிளையை விட்டால்பின்
எங்குக் குதிப்பதும்நாம் என்பதுதான் என்கவலை!

**நாராயணன்:**

வந்தார் மகாயோக்யர்! வாய்க்கு ருசியில்லை.
இந்த இடமில்லை, வேறி டந்தான்! வேறென்ன!

**கந்தப்பன்:**

குன்றுதோறாடும் குரங்கே உன்அதிஷ்டம்!
நன்றாயிருந்தால் நமக்கென்ன ஆக்ஷேபம்?

**முத்து:**

புத்தி சொன்னார் கந்தப்பர் போதனையைத் தள்ளாதீர்!
கத்தர் அவர் என்று கருதுங்கள்! ஜாக்கிரதை!!

**குழந்தை:**

கத்தர் எனிலோ கரடு முரடாயிருக்கும்;
புத்தரப்பா அந்தப் புண்ணியவான் போற்றுங்கள்!

**கந்தப்பன்:**

இந்த வசந்தவி லாசமும் இல்லைஎன்றால்
சந்தையில் வண்டியின்கீழ் சாதம் சமைப் பவர்போல்
நாமே நடுத்தெருவீல் நாலைந்து செங்கல்லைச்
சேமிக்க வேண்டும் சிறிய அடுப்பிட்டுச்
சோறாக்க வேண்டுமே என்றுதான் சொல்லு கின்றேன்
வேறென்ன, செஞ்சி மலைக் குழந்தாய் வேறென்ன!!
நன்றாயில்லை நன்றாய் இல்லையென்று நாடோறும்
தின்றுவிட்டுத் தின்று விட்டுச் சொன்னால் அதுகேட்டுப்
போஜன சாலைக் குடையார் போவென்று சொல்லாமல்
ஆசையுடன் உம்மை அழைப்பாரோ சொல்லுங்கள்?

**முத்து:**

நீட்டாதே கந்தப்பா போதும் நிறுத்திவிடு!
பாட்டொன்று பாடப்பா கேட்டாற் பயனுண்டு

**குழந்தை:**

கந்தப்பா பாடாதே கத்து, நலமுண்டு
சொந்தவண் ணானுக்குத் தூக்கம் கலையுமன்றோ?

**கந்தப்பன்:**

கூவும் குயில்நம் குழந்தை! மரக்கிளையில்
தாவும் குரங்கென்று சொல்லல் சரியா?

**முத்து:**

குயிற்குழந்தாய் கொஞ்சம் நிறுத்தப்பா! நண்பர்
மயிற்கந்தர் பாட வழிவிடப்பா போதும்.

**கந்தப்பன்:**

முதலிலே நீ பாடு முத்து! மறுத்தால்
எதுவும் முடியாது சொன்னேன் எடுபாட்டை!

**குழந்தை:**

கத்தென்றால் கத்துமா சொல்வாய் கழுதையே!
முத்து நீ பாடி முடி; அதன் பின் மற்றவர்கள்.

(முத்து பாடச் சம்மதித்து, மேலே பார்த்தபடி என்ன பாட்டுப் பாடலாம் என்று யோசிக்கிறான்)

**நாராயணன்:**

மேல் எதற்குப் பார்க்கின்றாய் முத்து! விருதாவாய்!
தூலத்திலா வைத்தாய் சொல்லவந்த பாட்டை நீ?

**கந்தப்பன்:**

மல்லுக்கும் கேலிக்கும் வாய்த்தீரே யோசித்துச்
சொல்லட்டும் சும்மா இரு!

(முத்து பாடுகிறான் தாளத்தைவிட்டு, அனைவரும் சிரிப்பை

அடக்கி அடக்கிப் பார்த்தும் முடியாமல் கலீர் என்று சிரிக்கிறார்கள்)

- ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதாமண்டலம் (மாத இதழ்),
புத்தகம்-1; வெளியீடு-6, புதுச்சேரி, 1935.

**முத்து:**

தெரிந்ததை நான் பாடினேன் நீங்கள் சிரிக்கின்றீர்
தெரியாதென்றாலும் விடுவ தில்லை என்செயலாம்?
மருந்துக்கு வேண்டும் ஒருபாட்டுப் பாடு
மன்றாடுகின்றேன் குழந்தையப்பா உன்னைத்தான்!

**குழந்தை:**

சரிசரிநான் பாடுகின்றேன் அடக்குன்றன் வாயைச்
சகானாவிற் பாடவா நாட்டையிலா சொல்லு!

**முத்து:**

சரிதான் நீ சகானாவில் பாடலாம்; ஆனாலும்
சங்கரா பரணத்தில் ஒன்றுவிடு முதலில்.

**நாராயணன்:**

சங்கரனுக் காபரணம் பாம்பப்பா பாம்பு!
சர்ப்பத்திலா ஒன்றை இங்குவிடச் சொன்னாய்?
சங்கரனார் ஆபரணம் இங்கு வரவேண்டாம்
சகானாவே பாடினால் போதும் நீ பாடு!

(குழந்தை 'ஆரடி நீ இங்குவந்தவள்' என்ற பாட்டுப் பாடுகிறான்; எல்லாரும் சிரிக்கிறார்கள்.)

**முத்து:**

எங்கப்பா கற்றாய் நீ சகானாப் பாட்டை
இதுதானா நீசொன்ன சகானா ராகம்?
தங்குதடை இல்லாமல் பாடிவிட்டார்
சகானாவைக் கேட்டீரா? சிரிக்கா தீர்கள்!

**நாராயணன்:**

சுகமான நேரத்தை வீணாக் காதீர்!
சொல்லுவதைக் கேளுங்கள் கவனமாக!
வகையான விண்ணப்பம் ஒன்றிப் போது
வரைகின்றேன் கையொப்பம் இடுங்கள் நீங்கள்!
தகுமான மனிதருக்கே அதை அனுப்பிச்
சங்கீதம் கேட்கவழி தேட வேண்டும்.
நகநகென இவ்விடத்தில் நடக்கப்போகும்
நாடகத்தைப் பார்க்கப் போகின்றீர் யாரும்!

**முத்து:**

கண்டு சொன்னால் போதாதோ விண்ணப் பந்தான்
கந்ததுரை கேட்பாரோ! ஏன் கந்தப்பா?

**நாராயணன்:**

கண்டிப்பாய் விண்ணப்பம் வேண்டும் அப்பா!
"கனமுள்ள கந்தப்பா அவர்களுக்குத்,
தெண்டனிட்டுத் தெரிவிப்ப தென்ன வென்றால்
தின்றுவிட்டுச் சுகமாக இருப்பதற்கு
வண்டு ரீங்காரம் போல் கொஞ்சம் நீங்கள்
வாய்விட்டுப் பாட யாம் கேட்க வேண்டும்.
இப்படிக்குத் தங்களது தாழ்மையுள்ள,
ஈ·முத்து. நா. குழந்தை. புதுவைக் கோட்டைக்
குப்பம். நாராயணன் - சத்தம் போடாதீர்
கூறவதைத் கேளுங்கள் - சபையோ ரேநீர்.
தப்பாமல் அழகாக நமது கந்தர்
"தண்டகராண்யத்தை நோக்கிப்போன
அப்பரதனைக் கண்டு குகன் அடைந்த
ஆங்காரப் பாட்டையெல்லாம் வசனமெல்லாம்
சொல்லப் போகின்றார்கள். அதை எல்லாரும்
சுகமாகக் கேளுங்கள்! கைதட்டுங்கள்.

(அனைவரும் கரகோஷம் செய்கிறார்கள்)

**நாராயணன்:**

இல்லையப்பா! கந்தப்பா! கேட்க வேண்டும்.
என்முகத்தைப் பார்வெகுநாள் ஆசையுண்டு!
நல்லபெயர் எடுத்தாயாம் குகன்வேடத்தில்.
நாங்களெல்லாம் கேட்டதில்லை தயவு செய்வாய்!


**கந்தப்பன்:**

கேலிசெய்யப் பார்க்கின்றீர் அதுதான் சேதி!
கேளுங்கள்! சொல்லித்தான் தொலைக்க வேண்டும்.

- ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதாமண்டலம் (மாத இதழ்),
புத்தகம்-1; வெளியீடு-7, புதுச்சேரி, 1935.

■ ■ ■

* இந் நாடகம் முற்றுப்பெறவில்லை.




(காட்சி ஒன்று: கார் டிரைவராகிய ஆண்டியப்பன்,
கோகிலம் – கமலம் நோக்கி வரும் காட்சி.)



(காட்சி ஒன்று: கோகிலம் கமலம் ஆகிய இருவரிடத்தில் ஆண்டியப்பன் இரகசியத்தை வெளிப்படுத்தும் காட்சி)



(காட்சி இரண்டு: புதுச்சேரி 'வசந்த விலாசம்' என்ற உணவு விடுதியில்
சீட்டாட்டத்தின் ஒரு காட்சி)



(காட்சி இரண்டு: கமலம் கோகிலம் முறையே சின்ன கொய்யா, பெரிய கொய்யா வேடத்திலுள்ள காட்சி.)